<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, B.A, L.L.B.,

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு மார்ச் 23–ம் நாள் திங்கள்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 470/2025</u>

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
மேல்வருவத்தூர் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.162/2025 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

சரவணன், வயது 40, த/பெ.வேணு,
எண்.44, இந்திரா நகர்,
கூடலூர் கிராமம்,
மதுராந்தகம் தாலுக்கா
செங்கல்பட்டு மாவட்டம்.

........ எதிரி

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 23.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 470/2025<br>TNCG15-001842-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Melmaruvathur PS.<br>**Complainant** |
| | | **சரவணன், வயது 40, த/பெ.வேணு,**<br>**Accused** |
| 6. | Date of Occurrence | 08.05.2025 |
| 7. | Date of Complaint | 09.05.2025 |
| 8. | Date of Arrest if any and remand | 09.05.2025 |
| 9. | Period of Remand of the Accused | ----- |
| 10. | Date of release on bail | 13.05.2025 |
| 11. | Date of Final Report | 10.05.2025 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | ------- |
| 13. | Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha | 13.02.2026 |

| | | |
|---|---|---|
| | Sanhita | |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the Witnesses | Witness / Chief / Cross:<br>PW1 – 12.03.2026 – 12.03.2026<br>PW2 – 12.03.2026 – 12.03.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS | ------ |
| 16. | Date of Examination of the Accused U/s.351 of BNSS Act | 16.03.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance / production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | ------ |
| 19. | Date of Commencement of Trial | 13.02.2026 |
| 20. | Date of Closure of Trial | 23.03.2026 |
| 21. | Date of Sentence of Order | 23.03.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | ------ |
| 23. | If any delay, give Explanation | ------ |

****

இவ்வழக்கானது 17.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 470/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 23.03.2026–ஆம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தமிழரசு அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## <u>தீர்ப்புரை</u>

**1.** இவ்வழக்கானது பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 351(3) 118(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**குற்றமுறையீட்டின் சுருக்கம்:**

**2.** இவ்வழக்கில் சாட்சி–1 தவமல்லி என்பவர் தனக்கு திருமணமாகி 10 வருடங்கள் ஆகின்றதாகவும், சாட்சி–1 க்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளதாகவும், சாட்சி–1 ன் கணவர் சொந்தமாக லாரி வைத்து ஓட்டிக் கொண்டு இருப்பதாகவும், அவர் 15 நாளுக்கு ஒரு முறை ரூ.500/– தருவதாகவும், அது இரு பெண் குழந்தைகளை வைத்துக் கொண்டு செலவிற்கு போதாத காரணத்தினால் சாட்சி–1 மறைமலைநகரில் உள்ள Good Night Company–க்கு 07.05.2025 ம் தேதி வேலைக்கு சேர்ந்ததாகவும், 08.05.2025 ம் தேதி அன்று காலையிலிருந்து சாட்சி–1 ன் கணவரும் எதிரியுமான சரவணன் என்பவர் சாட்சி–1 ஐ பார்த்து நீ ஏன் வேலைக்கு போற நீ வேலைக்கு போககூடாது வீட்டிலேயே இரு என சாட்சி–1 ஐ அசிங்கமாக பேசி திட்டி மிரட்டியதாகவும், இந்நிலையில் அன்று மாலை சுமார் 03.30 மணியளவில் மீண்டும் நீ வேலைக்கு பேனா அவ்வளவுதான் என்று கூறி அருகில் இருந்த கட்டையால் சாட்சி–1 ஐ தாக்கியதால் இரண்டு கையிலும் காயம் ஏற்பட்டு சாட்சி–1 தவமல்லி என்பவருக்கு கொடுங்காயம் ஏற்பட எதிரி காரணமாகிறார். எனவே, எதிரி பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 296(b), 118(2), 351(3)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 17.11.2025 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS–ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழுங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 118(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு

விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

**5.** அரசு தரப்பில், அ.சா.1 தவமல்லி என்பவர் அவரது சாட்சியத்தில் தான் தற்போது கூடலூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரி தன் கணவர் ஆவார் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், கடந்த வருடம் ஒரு நாள் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் தான் தண்ணீர் எடுக்க சென்றபோது தவறி கீழே விழுந்துவிட்டேன் என்றும், அதில் தனக்கு கை உடைந்துவிட்டது என்றும், பின்னர் மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், தனக்கும் தன் கணவருக்கும் பிரச்சனை இருந்ததால் தவறுதலாக தான் தன் கணவர் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை தான்தான் கொடுத்தேன் என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்களா என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2025 ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பார்த்தீபன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.2 மோகன் என்பவர்

தனது சாட்சியத்தில் கடந்த 08.05.2025ம் தேதி மாலை 6.05 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பார்த்தீபன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற தவமல்லி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.162/2025 BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேதகிரி மற்றும் வெங்கடேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் எதிரியை தேடிவந்த நிலையில் 09.05.2025 மதியம் 1.00 மணிக்கு எதிரி வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் வழக்கில் காயம்பட்ட தவமல்லிக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய மருத்துவர் சசிபிரியா என்பவரை என்றும், பின்னர் காயம் பட்ட நபருக்கு மருத்துவர் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவான BNS பிரிவுகள் 296(b), 118(1), 351(3) இருந்து BNS பிரிவுகள் 296(b), 118(2), 351(3) ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது BNS பிரிவுகள் 296(b), 118(2), 351(3) பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரியிடம் 351(1)(ஆ)BNSS–ன் கீழ் வினவிய போது எதிரி அதனை மறுத்து கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 118(2)–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**தீர்வு :–**

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்டுள்ள பாரதிய நியாய சன்ஹிதா பிரிவுகள் 118(2)–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 தவமல்லி என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஐ பரிசீலிக்கையில் தன் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், தனக்கு திருமணம் ஆகி பத்து வருடங்கள் ஆகின்றதாகவும் தனக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளதாகவும், தன் கணவர் சொந்தமாக லாரி வைத்து ஓட்டிக் கொண்டு இருக்கிறார் என்றும், அவர் 15 நாளுக்கு ஒரு முறை ரூபாய்.500 தருவதாகவும், அது இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு செலவிற்கு போதாத காரணத்தால் தான் மறைமலை நகரில் உள்ள குட் நைட் கம்பெனி என்ற நிறுவனத்தில் கடந்த 07.05.2025 ம் தேதி வேலைக்கு சேர்ந்ததாகவும், 08.05.2025 அன்று காலையில் இருந்து "நீ ஏன் வேலைக்கு போற நீ வேலைக்கு போகக்கூடாது வீட்டிலேயே இரு" என்று அசிங்கமாக திட்டி மிரட்டியதாகவும், அன்று மாலை 3:30 "மீண்டும் நீ வேலைக்கு போன அவ்வளவுதான்" என்று கூறி அருகில் இருந்த கட்டையால் தன்னை தாக்கினார் என்றும், இதில் தனக்கு இரண்டு கையிலும் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், உடனே தன் அக்கா மகளின் உதவியுடன் மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததாக

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.1 அவரது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரி தன் கணவர் ஆவார் என்றும், தனக்கும் தன் கணவருக்கும் பிரச்சனை இருந்ததால் தவறுதலாக தான் தன் கணவர் மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் புகாரை தான்தான் கொடுத்தேன் என்று சாட்சியமளித்துள்ளார். எனவே, மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ல் உள்ள சங்கதிகள் குறித்த நியாயாமான சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது. அ.சா.1 அரசு தரப்பில் இருந்து முற்றிலும் பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் மற்ற பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விட்டொழிக்கப்பட்டனர்.

**12.** இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.6 ஐ பரிசீலிக்கையில் கடந்த 08.05.2025 ம் தேதி அன்று மாலை 5.40 மணியளவில் கீர்த்தனா என்பவர் தவமல்லி என்பவரை மருத்துவமனையில் அனுமதித்தாகவும், தவமல்லி என்பவரை அவரது கணவர் மதுபோதையில் மாலை சுமார் 3.30 மணியளவில் அடித்ததாகவும் அதில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால், அ.சா.1 சாட்சியத்தில் கடந்த வருடம் ஒரு நாள் காலை 10.00 முதல் 11.00 மணிக்குள் தான் தண்ணீர் எடுக்க சென்றபோது தவறி கீழே விழுந்துவிட்டேன் என்றும், அதில் தனக்கு கை உடைந்துவிட்டதால் மருத்துவமனைக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் எதிரி தாக்கியதால் ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

**13.** மேல்வருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வரும் அ.சா.**2** திரு.மோகன் என்பவர் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி திரு.பார்த்திபன் என்பவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் அவரின் கையொப்பம் மற்றும் விசாரணை முறை குறித்து தனக்கு நன்கு தெரியும் என்பதால் மேற்படி அதிகாரி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.1 எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.242/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**15.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அனாவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ல் உள்ள சங்கதிகளை மறுத்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.பார்த்திபன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 திரு.மோகன் என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேற்கண்ட முரண்பாடுகளால், அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் அரசு தரப்பு சான்றாவணங்களையும் ஒப்பிட்டு பரிசீலித்து பார்க்கும் போது, புகாரில் கண்டுள்ள சங்கதிகளை ஒத்து வலியுறுத்தி எதிரி தான் அ.சா.1 யை ஆபத்தான ஆயுதங்களினால் இரண்டு கையிலும் தாக்கி அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு கொடுங்காயம் ஏற்பட காரணமானதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே,

பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 118(2)–ன் கீழான கூறுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**18.** எனவே முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் பாரதிய நியாய சன்ஹிதா பிரிவு 118(2)–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலிக்கையில் சுமார் 3 அடி நீளமுள்ள மரக்கட்டை ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது தெரிய வரும் நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.பார்த்திபன் என்பவருக்கு பதிலாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 மோகன் மேற்படி பொருள் கைப்பற்றப்பட்டது குறித்து எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை என்பதால் மேற்படி பொருள் இவ்வழக்கின் சான்று பொருளாக குறியீடு செய்யப்படவில்லை. மேற்படி மரக்கட்டையானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 16:17:51 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | தவமல்லி, க/பெ.சரவணன் |
| அ.சா.2 | மோகன், த/பெ.ஏழுமலை |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் | அ.சா.1 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.2 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 16:17:56 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுராந்தகம்.**